**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C)

| | | |
|---|---|---|
| Case No. | : | CC No. 594/2022 |
| Deposition of witness for Prosecution | : | P.W-2 |
| Name | : | மணிகண்டன், வயது 43 |
| Father Name/Husband Name | : | லட்சுமணன் |
| Village | : | கோவில்பட்டி |
| Taluk | : | கோவில்பட்டி |
| Calling | : | தங்கவேலை |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 09th day of October 2023.

**(2 வது எதிரி ஆஜர் 1 வது எதிரி ஆஜர் இல்லை கு.வி.மு.ச பிரிவு 317 ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது கோவில்பட்டியில் வசித்து தங்க வேலை செய்கிறேன். அ.சா.1 ஐ தெரியும் எனது கடைக்கு எதிரே உள்ள கடைக்காரர். எதிரிகளை தெரியும். எனது கடைக்கு பின்னால் தான் அவர்கள் வீடு உள்ளது. கடந்த 11.07.2020 அம் தேதி காலை 09.00 மணிக்கு 2 வது எதிரியின் மகன் 1 வது எதிரி அ.சா.1 ன் கடைக்கு வந்தார்.
2. வந்து பணம் அவசரமாக தேவைப்படுவதாக சொல்லி அதற்கு பதிலாக வீட்டில் உள்ள நகையை தருவதாக சொன்னார். அதற்கு அ.சா.1 உன்னை நம்பி தரமுடியாது உனது அப்பாவை வந்து சொல்ல சொல்லு இப்போதைக்கு பணம் இல்லை என்றும் பார்ப்போம் என்று சொன்னார்.
3. பின்னர் 11.00 மணிக்கு 1, 2 எதிரிகள் வந்து பணம் கொடுங்கள் என்றும் தான் பொறுப்பு ஏற்றுக்கொள்கிறேன் என்றும் சாயந்திரம் வந்து நகை கொடுத்துவிடுவதாக சொன்னார். சரி என்று நான் பணத்தை ரெடி பன்னிவிட்டு போன் பன்னுகிறேன் வந்து வாங்கிக்கொள்ளுங்கள் என்று அ.சா.1 சொன்னார்.
4. பின்னர் அ.சா.1 அவரது மகன் சுந்தரத்தின் மூலம்பணத்தைக் கொடுத்து அனுப்பியுள்ளார். அதனை 1 வது எதிரி வாங்கியுள்ளார். பின்னர் 07.00 மணிக்கு நகை என்ன ஆனது என்று அ.சா.1 கேட்டுள்ளார். 1 வது எதிரி சரிவர பதில் சொல்லாமல் மழுப்பியுள்ளார்.
5. பின்னர் இரவு 09.30 மணியளவில் எதிரிகளின் வீட்டிற்கு நானும் அ.சா.1 மற்றும் அவரது மகன் ஆகிய மூன்றுபேரும் போனோம்.

அதற்கு 2 வது எதிரி நகை இல்லை என்றும் வரவேண்டியிருக்கிறது என்றும் பின்னர் கொஞ்சநேரத்தில் வார்த்தை மாறி கொடுக்க முடியாது இல்லை என்று சொன்னார்கள்.

6. பணமே வாங்கவில்லை என்றும் சொல்லியுள்ளார். உன் மகன் போனில் பேசியுள்ளார் என்றும் அதன் ரெக்கார்டு உள்ளது என்றும் அ.சா.1 சொன்னதற்கு அவர்கள் இல்லை என்று மழுப்புயுள்ளார்கள். அ.சா.1 அரட்டி கேட்டதற்கு எதிரிகள் அசிங்கமாக பேசி கம்பியை வைத்து அடிக்க வந்தார்கள். நான் உடனே எதுவும் பேச வேண்டாம் காவல்நிலையத்திற்கு பார்த்துக்கொள்ளலாம் என்று கூறினேன் பின்னர் நான் கடைக்கு வந்துவிட்டேன். வழக்கு பற்றிபோலிசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>

1. உங்கள் கடை எங்கு உள்ளது என்றால் தெற்கு பஜாரில் உள்ளது. அ.சா.1ன் கடை எங்கு உள்ளது என்றால் எதிரே உள்ளது. கடைகள் ஒரே காம்பிளக்சில் உள்ளது. முதலில் மணிகண்டன் பேசும் போது உங்கள் கடையில் இருந்தீர்கள் என்றால் இல்லை அ.சா.1ன் கடையில் இருந்தேன்.
2. மணிகண்டன் வந்து கேட்கும் போது மணி என்ன இருக்கும் என்றால் காலை 09.00 மணி. உங்கள் கடை என்ன கடை என்றால் தங்க பட்டறை வேலை பார்க்கும் கடை. நீங்கள் எதற்கு 09.00 மணிக்கு அ.சா.1 ன் கடைக்கு போனீர்கள் என்று சொன்னீர்களா என்றால் இல்லை.
3. 11.00 மணிக்கு நீங்கள் அ.சா.1 கடைக்கு எதற்கு போனீர்கள் என்றுசொன்னீர்களா என்றால் அப்போது போகவில்லை நான் பார்த்தேன். அதனால் அப்போது அவர்களுக்குள் என்ன பேச்சு வார்த்தை நடந்தது என்று உங்களுக்கு தெரியாது என்றால் சரிதான். சுந்தர் பணம் கொடுக்க மாலை 05.00 மணிக்கு போனது நேரடியாக உங்களுக்கு தெரியாது என்றால் சரிதான்.
4. ஆனால் அ.சா.1 தன் மகன் மாலை 05.00 மணிக்கு பணத்தை கொண்டு போய் கொடுக்கப்போனதாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான். நீங்கள் சுந்தரிடம் பணத்தை கொடுத்ததை பற்றி கேட்டுத் தெரிந்து கொள்ளவில்லை என்றால் சரிதான். சுந்தர் என்ன செய்கிறார் என்றால் படிக்கிறார். என்ன படிக்கிறார் என்றால் தெரியாது.
5. அ.சா.1 என்ன கடை நடத்துகிறார் என்றால் தங்க வியாபாரம் செய்கிறார். அவர் வட்டிக்கு பணம் கொடுக்கும் வேலை செய்யவில்லை என்றால் சரிதான். அ.சா.1 தங்க நகைகளை விற்பனை செய்யும் தொழில் செய்கிறார் என்றால் சரிதான். நகைகள் விற்பனை செய்வதால் வரவு செலவு நோட்டுகள் இருக்கும் என்றால்

சரிதான்.

6. நகைகள் வாங்கி விற்றால் GST ல் பதிவு செய்ய வேண்டும் என்றால் சரிதான். அதற்கான ஆவணங்கள் பராமரிக்க வேண்டும் என்றால் சரிதான். அ.சா.1 மேற்படி ஆவணங்களை பராமரித்து வருகிறாரா என்றால் தெரியாது. அ.சா.1 பணத்தை எவ்வாறு தயார் செய்தார் என்பது உங்களுக்கு தெரியாது என்றால் சரிதான்.
7. போலிசார் அ.சா.1ன் கடையை பார்த்தார்களா என்றால் ஆம். அங்குள்ள பேரேடுகளை போலிசார் எடுத்துச்சென்றார்களா என்றால் அது எனக்கு தெரியாது. போலிசார் விசாரணையில் வழக்கு சம்பவம் நேரடியாக தெரியும் என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளீர்களா என்றால் 1வது எதிரி பணம் கேட்டு வந்த விவரம் தெரியும் என்று சொல்லியுள்ளேன்.
8. போலிசார் விசாரிக்கும் போது நீங்கள் உங்கள் கடையில் இருந்த போது 1வது எதிரி வந்ததாக சொல்லியுள்ளீர்கள் என்றால் இரண்டாவது முறை வந்த போது தான் எனது கடையில் இருந்தேன். அவரது கடையில் சி.சி.டி.வி உள்ளது என்றால் இல்லை காம்பிளகிசிலே சி.சி.டி.வி இல்லை.
9. அ.சா1 கடையிலும் காம்பிளக்சிலும் சி.சி.டி.வி உள்ளது என்றாலும் வழக்கிற்காக இல்லை என்று பொய் சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் இல்லை. சி.சி.டி.வி கேமரா பதிவுகளை பார்த்தால் நீங்கள் சொன்ன சமயத்தில் எதிரிகள் வந்ததாக சொல்வது பொய் என்று தெரியவரும் என்பதால் இல்லை என்று பொய்யாக சொல்கிறீர்கள் என்றால் சரியல்ல.
10. கனகசபாபதி காவல்நிலையத்தில்புகார் கொடுத்த போது நீங்களும் சாட்சி கையொப்பம் செய்தீர்கள் என்றால் சரிதான். அந்த புகாரை ஒரு வழக்கறிஞர் தான் எழுதினார் என்றால் சரிதான். நீங்கள் சொன்னது போல் சொன்ன நாள் நேரத்தில் எதிரிகள் அ.சா.1ன் கடைக்கு வந்து பணம் கேட்டதாக சொல்வதும் அதன் அடிப்படையில் அ.சா.1 தனது மகன் மூலம் பணம் கொடுத்துவிட்டதாக சொல்வதும் பொய் என்றால் சரியல்ல. அ.சா.1ன் தூண்டுதல் பேரில் பொய் சாட்சி அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken before me in open court in the presence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/ Tr. M. Kadarkarai Selvam
Judicial Magistrate No.I,
Kovilpatti.